வடமேல் மாகாண கல்வித் திணைக்களம் வடமேல் மாகாண கல்வித் திணைக்களம் வடமேல் மாகாண

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
**வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்**
**Provincial Education Department (NWP)**

**32 T I**

තෙවන වාර විභාගය 2024
மூன்றாம் தவணைப்பரீட்சை 2024
Third Term Examination 2024

ව්‍යාපාර අධ්‍යයනය I
வணிகக்கல்வி I
Business Studies I

ශ්‍රේණිය 12
தரம் 12
Grade 12

*පැය දෙකයි*
*இரண்டு மணித்தியாலம்*
*Two hours*

## வணிகக்கல்வி - I

**<u>கவனிக்க:</u>**

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- **இலக்கம் 1 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1) , (2) , (3), (4) , (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
- **இலக்கம் 31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்குரிய சுருக்கமான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**
- **அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.**

*01)* *பின்வருவனவற்றுள் வணிக நோக்கமல்லாதது,*
*(1) சந்தையில் தொடர்ந்தும் நிலைத்திருத்தல்.* *(2) இலாபத்தை உச்சப்படுத்தல்.*
*(3) வளங்களுக்குப் பெறுமானங்களைச் சேர்த்தல்.* *(4) விற்பனையை மேம்படுத்தல்.*
*(5) பங்குகளின் சந்தைப் பெறுமானத்தை அதிகரித்தல்.*
(........)

*02)* *சுகாதார சேவைகள் திணைக்களம் தொடர்பிலான பின்வரும் கூற்றுக்களுள் பிழையான கூற்று யாது?*
*(1) மூன்றாம் நிலைக்குரிய வணிக அமைப்பாகும்.* *(2) சேவைத்துறை வணிக அமைப்பாகும்.*
*(3) பொதுத்துறை வணிக அமைப்பாகும்.* *(4) கைத்தொழிற்துறை வணிக அமைப்பாகும்.*
*(5) இலாப நோக்கற்ற வணிக அமைப்பொன்றாகும்.*
(........)

*03)* *வணிகத்துக்கே உரித்தான முன்னேற்றகரமான நடத்தைகளும், பழக்கவழக்கங்களும், நேர்முறையிலான மதிப்பீடுகளும் எடுத்துக் காட்டப்படுவது,*
*(1) சமூக, கலாசார சூழலின் கீழாகும்.* *(2) நிறுவனக் கட்டமைப்பின் கீழாகும்.*
*(3) மக்கட் சூழலின் கீழாகும்.* *(4) சட்டச் சூழலின் கீழாகும்.*
*(5) சமூகக் கலாசாரச் சூழலிலாகும்.*
(........)

*04)* *அரசின் கட்டளைச் சட்டங்கள் மற்றும் பணவீக்கம் என்பன உள்ளடங்கும் சூழல்களாவன முறையே,*
*(1) பொருளாதாரச் சூழல், பொருளாதாரச் சூழல்* *(2) பொருளாதாரச் சூழல், சட்டச்சூழல்*
*(3) சட்டச்சூழல், பொருளாதாரச் சூழல்* *(4) அரசியல் சூழல், பொருளாதாரச் சூழல்*
*(5) தொழிநுட்பச் சூழல், இயற்கைச் சூழல்*
(........)



iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers Model Answers - Study Resources

05) வணிகங்கள், மானிடப் பல்லினத்தன்மைகளுக்கு மதிப்பளித்து செயற்பட வேண்டியிருப்பது,
(1) இலாபத்தை உச்சப்படுத்திக் கொள்வதற்காகும்.
(2) சமூக மற்றும் கலாசாரம் நிலைபேறானது என்பதை உறுதிப்படுத்துவதற்காகும்.
(3) சந்தைப் பங்கை அதிகரித்துக் கொள்வதற்காகும்.
(4) பொருளாதாரம் நிலைபேறானது என்பதற்கான பங்களிப்பை வழங்குவதற்காகும்.
(5) சூழல் நிலைபேறானது என்பதற்கான பங்களிப்பை வழங்குவதற்காகும். (........)

06) 2023 ஆம் ஆண்டின் இலங்கை அரசின் வரியல்லாத வருமானங்களை மொத்த அரச வருமானங்களின் வீதமாகக் குறிப்பிடுவதாயின் அது,
(1) 10.8 % ஆகும். (2) 29.9 % ஆகும். (3) 89.2 % ஆகும். (4) 30.1 % ஆகும். (5) 70.1 % ஆகும். (........)

07) அரசின் நிதிக்கொள்கைக் கருவியொன்றல்லாதது,
(1) சட்டபூர்வ ஒதுக்கு வீதம் (2) திறந்த சந்தை நடவடிக்கைகள் (3) வட்டி வீதம்
(4) கடனுக்கான வரையறைகளை விதித்தல். (5) வேலை வாய்ப்பு வீதம் (........)

08) 1985 ஆம் ஆண்டில் வியன்னா (Vienna convention) மாநாட்டின் அடிப்படை நோக்கமாக அமைவது,
(1) காலநிலை மாற்றங்களைக் கட்டுப்படுத்தல். (2) ஓசோன் பாதிப்பை தடுத்து அதனைப் பாதுகாத்தல்.
(3) கழிவுப்பொருள் முகாமைத்துவம். (4) சமுத்திரங்களைப் பாதுகாத்தல்.
(5) அணு ஆயுதப்பாவனையைத் தடுத்தல். (........)

09) பங்குடைமையொன்றைப் பதிவு செய்வது தொடர்பில் இலங்கையில் நடைமுறையிலுள்ள சட்டம்,
(1) 1890 ஆம் ஆண்டின் பங்குடைமைக் கட்டளைச் சட்டம்.
(2) 1907 ஆம் ஆண்டின் வரையறுக்கப்பட்ட பங்குடைமைக் கட்டளைச் சட்டம்.
(3) 1918 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க வியாபாரப் பெயர்ப் பதிவுக் கட்டளைச் சட்டம்.
(4) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்.
(5) 1840 ஆம் ஆண்டின் மோசடித் தவிர்ப்புக் கட்டளைச் சட்டம். (........)

10) பின்வரும் கூற்றுக்களுள் வரையறுக்கப்பட்ட தனிக்கம்பனியொன்று தொடர்பிலான சரியான கூற்று யாது?
(1) ஆகக்குறைந்த பங்காளர் எண்ணிக்கை 01, உச்ச எண்ணிக்கை வரையறுக்கப்படவில்லை.
(2) ஆகக்குறைந்த இயக்குனர் எண்ணிக்கை 02, உச்ச எண்ணிக்கை வரையறையற்றது.
(3) கொழும்புப் பங்குப் பரிமாற்றகத்தில் பதிவு செய்ய முடிதல்.
(4) பங்குகளையும், தொகுதிக்கடன்களையும் பகிரங்கமாக வழங்க முடியும்.
(5) கடனை மீளச்செலுத்தும் ஆற்றலை பரிசோதிக்காமல் பங்கிலாபத்தை பகிர்ந்தளிக்க முடிதல். (........)

11) அ) சுயாதீனமான திறந்த அங்கத்துவம். ஆ) சமூகம் தொடர்பில் கவனம் செலுத்தல்.
இ) பொதுத்தேவை மற்றும் எதிர்பார்ப்புக்களை உள்ளடக்கியிருத்தல்.
ஈ) அத்தியவசியப் பொருட்களை நியாயமான விலைக்கு வழங்கல்.
உ) சனநாயக அங்கத்துவத்துடன் கூடிய நிர்வாகம். (........)

மேலே தரப்பட்டவற்றுள் கூட்டுறவுக் கொள்கைகளை மாத்திரம் காட்டும் விடை யாது?
(1) அ, ஆ, இ (2) அ, ஆ, ஈ (3) அ, இ, ஈ (4) அ, ஆ, உ (5) இ, ஈ, உ (........)

12) பிணையாள் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றில் இருக்கக்கூடிய ஆகக்குறைந்த, உச்ச பங்காளர்களின் எண்ணிக்கையினைச் சரியாகக் காட்டும் விடை யாது? (........)
(1) ஆகக்குறைந்தது 01, உச்ச எண்ணிக்கை 50 (2) ஆகக்குறைந்தது 02, உச்ச எண்ணிக்கை 50
(3) ஆகக்குறைந்தது 01, உச்ச எண்ணிக்கை வரையறையற்றது.
(4) ஆகக்குறைந்தது 02, உச்ச எண்ணிக்கை வரையறையற்றது.
(5) ஆகக்குறைந்தது 02, உச்ச எண்ணிக்கை 20
(........)



iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers Model Answers - Study Resources

13) பின்வருவனவற்றுள் முயற்சியாண்மையின் தனியாள் அனுகூலமொன்றாகக் குறிப்பிடக்கூடியது,
(1) புதிய வேலை வாய்ப்புக்கள் உருவாதல்.
(2) சமூக அந்தஸ்தும், ஏற்றுக்கொள்ளும் தன்மையும் உருவாதல்.
(3) பூரண வேலை வாய்ப்பு நிலமை உருவாதல்.
(4) புதிய பொருட்களைப் பயன்படுத்தும் வாய்ப்பு கிடைக்கப் பெறல்.
(5) பொது மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வடைதல். (........)

14) பின்வருவனவற்றுள் முயற்சியாண்மைத் திறனொன்றாகக் குறிப்பிடக்கூடியது,
(1) மேற்பார்வை (2) வினைத்திறன் (3) தலைமைத்துவம் (4) ஊக்குவிப்பு (5) அர்ப்பணிப்பு
(........)

15) சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கியானது நிதி அனுசரணை வழங்குகின்றதும், தேசிய அபிவிருத்தி வங்கி மீள் நிதியிடல் வசதிகளை வழங்குகின்றதுமான சிறிய வணிகங்களுக்கான உதவி வழங்குகின்ற முன்மொழிவுத்திட்டம்,
(1) சஹன்யா (2) சுவன கடன்திட்டம் (3) தேர்ச்சி விருத்திச் செயற்திட்டம்
(4) கம்புபுதுவ (5) சமுர்த்தி அபிவிருத்தி வங்கி
(........)

16) கீழே நிரல் **x** யில் பண வகைகளும் நிரல் **y** யில் அப்பண வகைகளுக்கான உதாரணங்களும் தரப்பட்டுள்ளன.

| நிரல் x | நிரல் y |
|---|---|
| 1) சட்டப் பணம் | A - நடைமுறைக் கணக்குகளின் மீதி |
| 2) வங்கிப் பணம் | B - குற்றி நாணயங்களும் நாணயத்தாள்களும். |
| 3) இலத்திரனியல் பணம் | C - நிலையான வைப்பு |
| 4) அண்மியப் பணம் | D - கடனட்டை |

(........)

மேலே குறிப்பிடப்பட்ட பண வகைகளுக்குப் பொருத்தமான உதாரணங்களை நிரல் y யுடன் பொருத்தும் போது கிடைக்கும் விடை,
(1) 1 - B , 2 - C , 3 - D , 4 - A (2) 1 - B , 2 - A , 3 - D , 4 - C
(3) 1 - D , 2 - C , 3 - B , 4 - A (4) 1 - C , 2 - A , 3 - B , 4 - D
(5) 1 - B , 2 - D , 3 - C , 4 - A
(........)

17) அலகுப்பொறுப்புடன் தொடர்புடைய பிரிவினரைக் காட்டும் சரியான விடையைத் தெரிவு செய்க.
(1) அலகுப் பொறுப்பாளர், அலகு நிதி, அலகு உரிமையாளர்கள்.
(2) அலகு உரிமையாளர், முதலீட்டாளர்கள், ஒப்புறுதியாளர்.
(3) அலகுப் பொறுப்பாளர், தரகர்கள், அலகு உரிமையாளர்கள்.
(4) அலகு முகாமைத்துவக் கம்பனி, அலகு பொறுப்பாளர்கள், அலகு உரிமையாளர்கள்.
(5) அலகு முகாமைத்துவக் கம்பனி, ஒப்புறுதியாளர், தரகர்கள்
(........)

18) இலங்கையின் நிதி முறைமையினுள் செயற்படுகின்ற சில நிதி நிறுவனங்கள் கீழே தரப்பட்டுள்ளன.
A - காப்புறுதிக் கம்பனி B - அலகுப் பொறுப்பு C - முயற்சியாண்மை மூலதனக் கம்பனிகள்
D - ஊழியர் சேமலாப நிதியம் E - ஊழியர் நம்பிக்கை நிதியம் F - விசேட குத்தகை நிதிக் கம்பனிகள்.
மேலே தரப்பட்ட நிதி நிறுவனங்களுள் ஒப்பந்த சேமிப்பு நிறுவனங்களை உள்ளடக்கும் விடை யாது?

(1) A, D, E (2) B, C, F (3) B, D, F (4) D, E, F (5) A, C, E

(........)

19) குகன் அரச நிறுவனமொன்றின் ஊழியராவார். அவரது வயது 35 வருடங்களாகும். அவரின் சம்பளத்திற்கு மேலதிகமாக வேறு வருமான வழிகளும் அவருக்குக் காணப்படுகின்றன. காப்புறுதிக் கம்பனியிலிருந்து ஆயுள் காப்புறுதியொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு அவர் எதிர்பார்க்கின்றார். இதன்போது குகன் (..உச்ச) நம்பிக்கையை உறுதிப்படுத்துவதற்கு சமர்ப்பிக்கத் தேவையற்ற தகவலாக அமைவது,
(1) குகனின் வயது (2) தேகாரோக்கியம் (சுகாதார நிலமை)
(3) குகனின் பழக்க வழக்கங்களும், பொழுதுபோக்குகளும். (4) தங்கி வாழ்வோர் தொடர்பிலான தகவல்கள்.
(5) நட்ட ஈடு வழங்கப்படுகின்ற சந்தர்ப்பங்கள்.
(........)


iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers Model Answers - Study Resources

20) தீயபாயக் காப்புறுதியின் போது தீயினால் ஏற்படுகின்ற இடர்களுக்கு மேலதிகமாக பாதகாப்பு பெறக்கூடிய ஏனைய இடர்களை உள்ளடக்கிய விடை யாது?

(1) வெடிப்புக்களால் ஏற்படும் நட்டம், வழிப்பொருள் காப்புறுதி, இயற்கை அனர்த்தங்கள், மோதல்களினால் ஏற்படும் சேதம்.
(2) மின்சார ஒழுக்கினால் ஏற்படும் இடர், கள்வர் அபாயக் காப்புறுதி, வெடிப்புக்களால் ஏற்படும் நட்டம்
(3) வேலை நிறுத்தத்தினால் ஏற்படுகின்ற சேதம், கள்வர் அபாயக் காப்புறுதி, பூமியதிர்ச்சி, வெடிப்புக்களால் ஏற்படும் நட்டம்
(4) வழிப்பறிக்கொள்ளை, வெடிப்புக்களால் ஏற்படும் நட்டம், கள்வர் அபாயக் காப்புறுதி
(5) வெடிப்புக்களால் ஏற்படும் நட்டம், போராட்டங்களினால் ஏற்படும் சேதம், மின்சார ஒழுக்கினால் ஏற்படும் சேதம், மோதல்களினால் ஏற்படும் சேதம்.

(........)

21) சந்தைப்படுத்தல் முகாமையாளர் 05 வருட சந்தைப்படுத்தல் தொடர்பிலான விடயங்களை விரிவாக முன்வைப்பதற்கு ஆயத்தமாக உள்ளார். இதற்கு மிகவும் பொருத்தமான தொடர்பாடல் முறை யாது?

(1) நேருக்கு நேராக நடத்தப்படுகின்ற கூட்டம். (2) தொலைபேசி
(3) அறிக்கை (Report) (4) மெமோ (Memo) பத்திரம். (5) இலத்திரனியல் தபால்

(........)

22) பேச்சாளர் ஒருவர் தனது மனதில் உதித்த கருத்துக்களை வசனங்களாக மாற்றம் செய்கின்றார். இச்செயற்பாட்டிற்குரிய தொடர்பாடல் அடிப்படையாக அமைவது,

(1) பின்னூட்டல் (2) துலங்கல் (3) பெறுபவர் (4) ஊடகம் (5) செய்தி

(........)

23) பின்வரும் கூற்றுக்களுள் பிழையான கூற்றினைத் தெரிவு செய்க.

(1) ஊடகம் என்பது தொடர்பாடல் செயன்முறையின் அடிப்படைகளில் ஒன்றாகும்.
(2) செய்திப் பரிமாற்றங்கள் இடம்பெறுவதற்கு தொடர்பாடல் அத்தியவசியமானதாகும்.
(3) தொடர்பாடலானது செய்தியை அனுப்புபவரிடமிருந்தே முதலில் ஆரம்பமாகின்றது.
(4) செய்தியைப் பெறுபவர் பெற்ற செய்தி தொடர்பில் செயற்படுகின்ற முறையே பின்னூட்டல் எனப்படும்.
(5) மேலே தரப்பட்ட சகல விடைகளும் பிழையானவை.

(........)

24) போக்குவரத்து தொடர்பில் ஏற்க வேண்டியேற்படுகின்ற சமூகச் செலவொன்றாகக் கருதக்கூடியது,

(1) போக்குவரத்து ஊடகத்தை உரிமையாக்கிக் கொள்வதற்கு ஏற்படுகின்ற செலவுகள்.
(2) வாகன விபத்து காரணமாக உயிர் இழக்கப்படல்.
(3) எரிபொருளுக்கு ஏற்படுகின்ற கிரயம்.
(4) வாகன விபத்தில் மோட்டார் வாகனத்திற்கு ஏற்படுகின்ற சேதம்.
(5) உதிரிப்பாகங்களுக்கு ஏற்படுகின்ற செலவு.

(........)

25) கீழே **x** நிரலில் போக்குவரத்து ஊடகங்களும் **y** நிரலில் போக்குவரத்து வழிகளும் காட்டப்பட்டுள்ளன. **x** மற்றும் **y** நிரல்களை சரியாகப் பொருத்தும் போது கிடைக்கும் விடை,

| **நிரல் x** | **நிரல் y** |
|---|---|
| 1) புகையிரதம் | A - பெருந்தெரு |
| 2) சைக்கிள் | B - புகையிரதப் பாதை |
| 3) ஆகாய விமானம் | C - ஆகாய வழி |
| 4) படகு | D - நீர் வழிப்பாதை |

(1) 1 - A , 2 - B , 3 - C , 4 - D
(2) 1 - B , 2 - C , 3 - D , 4 - A
(3) 1 - C , 2 - B , 3 - D , 4 - A
(4) 1 - B , 2 - A , 3 - C , 4 - D
(5) 1 - D , 2 - B , 3 - C , 4 - A

(........)



iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers · Model Answers · Study Resources

26) தனியார் பயணிகள் பேரூந்தொன்று பாதையில் பயணிப்பதற்குப் பெற்றிருக்க வேண்டிய ஆவணங்களை மாத்திரம் உள்ளடக்கிய விடை யாது?
(1) புகைப்பரிசோதனைச் சான்றிதழ் / மூன்றாம் பிரிவுக் காப்புறுதி / வாகன தரச் சான்றிதழ் / பாதை அனுமதிப்பத்திரம்
(2) புகைப் பரிசோதனைச் சான்றிதழ் / மூன்றாம் பிரிவுக் காப்புறுதிச் சான்றிதழ் / பாதை அனுமதிப்பத்திரம் / வாகன தரச் சான்றிதழ்
(3) செல்லுபடியாகக்கூடிய வாகன சாரதி அனுமதிப் பத்திரமும் வருமான வரிச் சான்றிதழும் / புகைப் பரிசோதனைச் சான்றிதழ் / விரிவான மோட்டார் காப்புறுதிப்பத்திரம் / தரச் சான்றிதழ்
(4) வருமான வரிச் சான்றிதழ் / மூன்றாம் பிரிவுக் காப்புறுதி / பயண அனுமதிச்சீட்டு / பாதை அனுமதிப்பத்திரம்
(5) பதிவுச் சான்றிதழ் / சாரதி அனுமதிப் பத்திரம் / விரிவான மோட்டார் காப்புறுதி / வருமான அனுமதிப்பத்திரம்

(........)

27) சரத் பெரேரா என்பவர் விற்பனைக்குள்ள காணிகள் மற்றும் வாகனங்கள் தொடர்பிலான தகவல்களைப் பெற்று கொள்வனவாளர்களுக்கு அவற்றைச் சமர்ப்பித்து விற்பனை மற்றும் கொள்வனவு இடம்பெறுவதற்கான சூழல்களை உருவாக்கிக் கொடுக்கின்றார். அதன் பின்னர் விற்பனையாளர் மற்றும் கொள்வனவாளர்களிடமிருந்து தலா 3 % கட்டணமொன்றை அறவிட்டுக் கொள்கின்றார். சரத் பெரேரா ஒரு,
(1) வியாபாரியாவார். (2) ஏல விற்பனையாளராவார். (3) காரணிகராவார்.
(4) பொறுப்பு முகவராவார் (5) தரகராவார்.

(........)

28) சரத் பெரேராவிற்குள் கிடைக்கப் பெறுகின்ற கொடுப்பனவு,
(1) தரகுப் பணமாகும். (2) ஏல விற்பனைக் கட்டணமாகும். (3) சம்பளமாகும்.
(4) தரகுக் கட்டணமாகும். (5) சம்பளமாகும்.

(........)

29) சில்லறை வியாபாரத்தின் முக்கியமான பண்புகளிலொன்று,
(1) இறுதி நுகர்வுக்காக பொருட்கள், சேவைகளை விற்பனை செய்வதாகும்.
(2) கடனுக்குப் பொருட்களை விற்பனை செய்வதாகும்.
(3) நுகர்வோருடன் நெருங்கிய தொடர்பினைப் பேணுவதாகும்.
(4) மீள் விற்பனைக்காகப் பொருட்களை விற்பனை செய்வதாகும்.
(5) ஒரு வகைப் பொருட்களை மாத்திரம் விற்பனை செய்வதாகும்.

(........)

30) சுதந்திரமான சர்வதேச வியாபாரத்தில் தாக்கம் செலுத்துகின்ற தீர்வை வரியல்லாத தடையொன்றாகக் குறிப்பிடக்கூடியது,
(1) பண்ட மேம்பாடு (2) வியாபார ஒப்பந்தம் (3) சுங்கத்தினால் அறிவிடப்படுகின்ற வரிகள்
(4) இயற்கை வளங்களின் பகிர்வில் காணப்படுகின்ற முரண்பாடுகள்.
(5) ஒப்பீட்டுக் கிரய நன்மைகள்.

(........)

♦ **31 தொடக்கம் 40 வரையான வினாக்களிலுள்ள இடைவெளிகளுக்குப் பொருத்தமான விடைகளை எழுதுக.**

31) அ) விற்பனை அல்லது பரிமாற்றம் இடம்பெறல் வணிகமொன்றின் .................................................... என்பதுடன், விற்பனையை உச்சப்படுத்தல் வணிகமொன்றின் .................................................... ஆகும்.

ஆ) பணத்தின் பரிணாம வளர்ச்சி முதலில் .................................................... பயன்படுத்தியே ஆரம்பமானதுடன், அதன் பின்னரான யுகத்தில் .................................................... பணங்கள் பயன்படுத்தப்பட்டன.

32) அ) தொழில் மூலத்திற்கேற்ப வணிகங்களை வகைப்படுத்தும் போது மின்சாரம், எரிவாயு, குளிரூட்டல் வசதிகளை வழங்கல் என்பன .................................................... துறைக்கு உரித்தாவதுடன், வீட்டுரிமை மற்றும் ஆதன வியாபாரம் என்பன .................................................... துறைக்குரியதாகும்.



iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers Model Answers - Study Resources

ஆ) பல்லினச் சமூக அமைப்பு ........................................................................ சூழலுக்குரியது என்பதுடன், தனி மனிதர்களினுள் காணப்படுகின்ற நம்பிக்கைகள், மரபுகள், சம்பிரதாயங்கள் என்பன ........................................................................ சூழலுக்குரியதாகும்.

33) அ) நிலைபேறான அபிவிருத்தி என்பது பொருளாதாரம், சூழல், ........................................ , ........................................ போன்ற மூன்று கோபுரங்களின் கீழ் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. காலநிலை மாற்றம் தொடர்பில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தம் ........................................................................ ஒப்பந்தம் எனப்படும்.

ஆ) குறைந்த பெறுமதிகளுடனான மூலப்பொருட்களைக் கூடிய பெறுமதி கொண்ட உற்பத்திகளாக மாற்றுதல் ........................................................................ எனப்படுவதுடன், உயர்ந்த பெறுமானம் கொண்ட உற்பத்திகளை குறைந்த பெறுமதி கொண்ட மூலப்பொருட்களாக மாற்றுதல் ........................................................................ எனப்படும்.

34) அ) அரசின் மீண்டெழும் செலவுகளில் கூடுதலான அளவு ........................................................................ காகச் செலவு செய்யப்படுவதுடன், அதற்கடுத்ததாக ........................................................................ என்பவற்றிற்கு கூடுதலான அளவு செலவு செய்யப்படுகின்றது.

ஆ) 2023 ஆம் ஆண்டில் அரசில் வரி வருமானத்தில் கூடுதலான வீதம் ........................................................................ மூலம் பெறப்பட்டதுடன், அதற்கடுத்ததாக ........................................................................ மூலம் கூடுதலான வீதம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

35) அ) நீண்ட காலம் நிலைத்திருத்தல் எனும் ........................................................................ காணப்படல் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றின் விசேட பண்பொன்றாகும் என்பதுடன், இவ்வாறான கம்பனியொன்று அதன் பங்காளரிடமிருந்து வேறுபட்ட ........................................................................ கொண்டதாகக் கருதப்படும்.

ஆ) இலங்கையின் கூட்டுறவுச் சங்கமொன்று ........................................................................ இலக்க கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படல் வேண்டும் என்பதுடன், அதற்கு ஆகக் குறைந்தது ........................................................................ ஒன்று சேரல் வேண்டும்.

36) அ) ........................................................................ க்கும் ........................................................................ க்குமிடையில் இடைநடுவராகச் செயற்படுதல் முயற்சியாண்மை எனப்படுவதுடன், ........................................................................ திறன்களைக் கொண்டவர் முயற்சியாளராவார்.

ஆ) முயற்சியாளரொருவருக்கு தனக்குக் கீழ் வேலை செய்வோர்களினூடாகக் கருமங்களை செய்விக்கக்கூடிய ஆற்றல் ........................................................................ எனப்படுவதுடன், வெளியக மற்றும் உள்ளகப் பிரிவினருடன் சிறந்த தொடர்புகளைப் பேணிச் செல்லக்கூடிய ஆற்றல் ........................................................................ எனவும் அழைக்கப்படும்.

37) அ) வணிகத்தின் முகாமையானது ........................................................................ மானதாகக் காணப்படல் மற்றும் பெரும்பாலும் ........................................................................ பிரதம முகாமையாளராகச் செயற்படல் என்பன சிற்றளவு வணிகங்களின் பண்புகளாகும்.

ஆ) சிறிய மற்றும் நடுத்தரளவு வணிகங்களுக்கு இலங்கைத் தரக்கட்டளைப் பணியகத்திலிருந்து ........................................................................ சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன், தேசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து ........................................................................ வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.



iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers Model Answers - Study Resources

38) அ) ............................................................................ மற்றும் விற்பனையாளருக்குமிடையில் பொருட்கள், சேவைகளின் உரிமையைப் ............................................................................ செய்யும் செயன்முறை வியாபாரம் எனப்படும்.

ஆ) வெளிநாட்டு வியாபாரத்தின் போது பயன்படுத்தப்படுகின்ற களஞ்சியமானது ............................................................................ எனப்படுவதுடன், கட்டளையானது ............................................................................ எனவும் அழைக்கப்படும்.

39) அ) காப்புறுதியின் போது எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய இடரைப் ............................................................................ மீதியில் ............................................................................ முடியுமாயின் அது இடர் எனப்படும்.

ஆ) காப்புறுதி செய்யப்படுகின்ற ............................................................................ தொடர்பில் காப்புறுதி செய்பவரும் காப்புறுதியை ஏற்கும் நிறுவனமும் வெளிப்படுத்த வேண்டிய சகல தகவல்களையும் மறைக்காது வெளிப்படுத்தல் ............................................................................ எனப்படும்.

40) அ) ............................................................................ சுமைச்சீட்டுக்குப் பதிலாக ............................................................................ சுமைச்சீட்டைப் பெற்றுக் கொள்வதற்கு ............................................................................ கடிதத்தை முன்வைத்தல் வேண்டும்.

ஆ) ஒரு சில நாடுகள் ஒன்றிணைந்து வரி, சுங்க வரி மற்றும் வியாபாரம் தொடர்பிலான ஒப்பந்தமொன்றை உருவாக்கிக் கொள்வது ............................................................................ எனப்படும்.

♦ **41 தொடக்கம் 50 வரையிலான வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளை எழுதுக.**

41) வணிகமொன்றின் நான்கு பண்புகளைத் தருக.

1) ............................................................................

2) ............................................................................

3) ............................................................................

4) ............................................................................

42) பொருளாதாரமொன்றின் உறுதித்தன்மையைத் தொடர்ந்தும் பேணுவதற்கு வணிகமொன்று பங்களிப்புச் செய்யக்கூடிய நான்கு முறைகளைத் தருக.

1) ............................................................................

2) ............................................................................

3) ............................................................................

4) ............................................................................

43) வணிகமொன்றினால் ஊழியர்களுக்கு நிறைவு செய்யப்பட வேண்டிய நான்கு சமூகப்பொறுப்புக்களைத் தருக.

1) ............................................................................

2) ............................................................................

3) ............................................................................

4) ............................................................................



iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers · Model Answers · Study Resources

44) சர்வதேச நுகர்வோர்களினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நான்கு நுகர்வோர் உரிமைகளைத் தருக.

1) ..............................................................................................................................................

2) ..............................................................................................................................................

3) ..............................................................................................................................................

4) ..............................................................................................................................................

45) அரச கம்பனியொன்றின் நான்கு பண்புகளைத் தருக.

1) ..............................................................................................................................................

2) ..............................................................................................................................................

3) ..............................................................................................................................................

4) ..............................................................................................................................................

46) உள்ளூராட்சி நிறுவனங்களின் கீழ் செயற்படுகின்ற வணிகங்களின் நான்கு பண்புகளைத் தருக.

1) ..............................................................................................................................................

2) ..............................................................................................................................................

3) ..............................................................................................................................................

4) ..............................................................................................................................................

47) முயற்சியாண்மைப் பண்புகள் மற்றும் திறன்களை மேம்படுத்திக் கொள்ளக்கூடிய நான்கு முறைகளைத் தருக.

1) ..............................................................................................................................................

2) ..............................................................................................................................................

3) ..............................................................................................................................................

4) ..............................................................................................................................................

48) உத்தரவுப் பத்திரம் பெற்ற விசேட வங்கிகள், வணிக நடவடிக்கைகளுக்கு தமது பங்களிப்பை வழங்குகின்ற நான்கு முறைகளைத் தருக.

1) ..............................................................................................................................................

2) ..............................................................................................................................................

3) ..............................................................................................................................................

4) ..............................................................................................................................................

49) கொடுப்பனவுக்காக வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற காசோலைக்குரிய பணத்தை வங்கி செலுத்த மறுக்கும் சந்தர்ப்பங்கள் நான்கு தருக.

1) ..............................................................................................................................................

2) ..............................................................................................................................................

3) ..............................................................................................................................................

4) ..............................................................................................................................................

50) இலத்திரனியல் வியாபாரத்தின் போது பின்பற்றப்படுகின்ற நடைமுறைகள் நான்கு தருக.

1) ..............................................................................................................................................

2) ..............................................................................................................................................

3) ..............................................................................................................................................

4) ..............................................................................................................................................



iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers Model Answers • Study Resources

மாகாண கல்வித் திணைக்களம் வடமேல் மாகாண திணைக்களம் வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்

තෙවන වාර විභාගය 2024
மூன்றாம் தவணைப்பரீட்சை 2024
Third Term Examination 2024

ව්‍යාපාර අධ්‍යයනය II
வணிகக்கல்வி II
Business Studies II

ශ්‍රේණිය 12
தரம் 12
Grade 12

*පැය තුනයි*
*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

## வணிகக்கல்வி - II

<u>அறிவுறுத்தல்கள்</u>

✵ ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஆகக் குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

### பகுதி - I

**(01)** சிஹான் தனது வீட்டுத் தோட்டத்தில் காய்கறி வகைகளை உற்பத்தி செய்வதுடன், அவற்றில் சிறிதளவை தனது வீட்டுத்தேவைகளுக்கு எடுப்பதுடன், எஞ்சியவற்றை நீரகற்றி காயவைத்து சுகாதார பாதுகாப்புடன் பொதி செய்து வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்கின்றார்.

1) அ) இலங்கையில் தற்காலத்தில் காணப்படுகின்ற பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு சிஹான் வணிகம் போன்ற வணிகங்கள் எவ்வாறு துணையாக அமையும் என்பதை விளக்குக.
ஆ) இந்நிகழ்வில் குறிப்பிடப்படுகின்ற நேர், நேரில் உற்பத்திகளுக்கான உதாரணங்களைத் தருக.

2) அ) சிஹான் வணிகத்தினை மேம்படுத்துவதற்கு இணைய வலையமைப்பைப் பயன்படுத்தக்கூடிய இரு முறைகளைத் தருக.
ஆ) சிஹான் தனது உற்பத்திகளுக்கு உணவு பாதுகாப்பு தொடர்பிலான சர்வதேச தர நிறுவனத்தின் தர நியமத்தைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்ப்பாராயின், அதற்கு பொருத்தமான தர நியமம் மற்றும் சூழல் பாதுகாப்பு தொடர்பிலான பொருத்தமான தர நியமம் என்பவற்றைக் குறிப்பிடுக.

3) இலத்திரனியல் வர்த்தகத்தை விடவும் இலத்திரனியல் வணிகமானது விரிவான எண்ணக்கருவொன்றாகும். விளக்குக.

4) ஜனித் சூரிய ஒளியின் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் நிலையமொன்றை பாரியளவில் அமைத்து அதன் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரத்தை தனது வீட்டுத்தேவைகளுக்கும், தனது வணிகத்தின் தேவைகளுக்கும் பயன்படுத்துகின்றார். அதே நேரம் தேசிய ரீதியில் மின்வலு வழங்கல் அமைப்பிற்கும் மின்சாரத்தை வழங்கி வணிக செயற்பாடொன்றாகவும் இதை மாற்றி இலாபம் உழைத்து வருகின்றார்.

அ) ஜனிதின் இவ்வணிகச் செயற்பாட்டினை தொழில் மூலத்தின் அடிப்படையிலும், உரிமையின் அடிப்படையிலும் வகைப்படுத்திக் காட்டுக.
ஆ) பூகோளச் சூழல் நிலைமைகள் தொடர்பிலான நான்கு உதாரணங்களைக் குறிப்பிடுக.

5) இலங்கையில் தற்போதைய சனத்தொகையில் வயோதிபர்களின் சனத்தொகை அதிகரித்துச் செல்கின்றது. இது எச் சூழல் காரணிக்குரியது என்பதைக் குறிப்பிடுவதுடன், இவ்வயோதிபர்களின் அதிகரித்துச் செல்கின்ற சனத்தொகையினை வணிக வாய்ப்பொன்றாக எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதையும் குறிப்பிடுக.

(4x5 = 20 புள்ளிகள்)



iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers Model Answers - Study Resources

**(02)** 1) அ) வணிகங்களின் சமூகப் பொறுப்புகள் தொடர்பில் ஐக்கிய அமெரிக்காவின் வரைவிலக்கணத்தைக் குறிப்பிடுக.
ஆ) வணிகங்களினால் சமூகத்திற்கு நிறைவேற்ற வேண்டிய நான்கு சமூக பொறுப்புக்களைத் தருக.

2) அ) வணிகமொன்று சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதினூடாக பெற்றுக்கொள்ளக்கூடிய நான்கு அனுகூலங்களைத் தருக.
ஆ) நிலைபேறான அபிவிருத்தி என்றால் என்ன என்பதை வரைவிலக்கணப்படுத்துவதுடன், அதன் பிரதான பகுதிகள் மூன்றையும் தருக.

3) நிலைபேறான சூழல் பாதுகாப்பானது கடந்த காலத்தை விடவும் தற்காலத்தில் மிக முக்கியமான தேவையொன்றாகக் காணப்படுகின்றது. விளக்குக.

4) கழிவு முகாமைத்துவத்தின் போது பயன்படுத்தக்கூடிய **4R** எண்ணக்கரு என்றால் என்ன என்பதைக் குறிப்பிட்டு ஒவ்வொன்றையும் விளக்குக.

5) அ) வணிக ஒழுக்க விழுமியங்கள் எண்ணக்கருவை விளக்குக.
ஆ) வணிக ஒழுக்க விழுமிய முறைமையொன்றைக் கட்டியெழுப்பும் போது கவனத்திற்கொள்ள வேண்டிய நான்கு விடயங்களைக் குறிப்பிடுக.

(4x5 = 20 புள்ளிகள்)

**(03)** குறித்த நாடொன்றில் அரசானது அந்நாட்டின் பொருளாதார நிலைமையைக் கருத்திற்கொண்டு வட்டி வீதங்களை அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கிறது.

1) மேலே குறிப்பிடப்பட்ட பொருளாதாரத்தில் அரசினால் எடுக்கப்பட்ட தீர்மானமானது வணிகங்களில் ஏற்படுத்தும் தாக்கங்களை விளக்குக.

2) அ) நேர் வரிக்கான இரண்டு உதாரணங்களைத் தருக.
ஆ) அரசானது கடன்களைக் கட்டுப்படுத்துவதற்காக "அளவு ரீதியான கடன் கட்டுப்பாடுகளை விதிக்கின்றது" இதனை விளக்குக.

3) அ) நுகர்வோரின் பொறுப்புக்கள் நான்கு தருக.
ஆ) முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியாகிய ஜோன். எப். கெனடியினால் முன்வைக்கப்பட்ட நுகர்வோர் உரிமைகள் நான்கு தருக.

4) அ) முறையான அமைப்பொன்றில் காணக்கூடிய பொதுவான இயல்புகள் மூன்று தருக.
ஆ) பின்வரும் நிறுவனங்கள் எவ் வணிக அமைப்பு வகைக்குட்பட்டது என்பதைக் குறிப்பிடுக.

A - அரலிய கம்பனி
B - செலிங்கோ பி எல் சி
C - வரையறுக்கப்பட்ட மெலிபன் பிஸ்கட் கம்பனி
D - இலங்கைப் போக்குவரத்துச் சபை

5) அ) இலாப நோக்கற்ற வணிக அமைப்பு வகைகள் நான்கு தருக.
ஆ) வரையறுக்கப்பட்ட பங்குடமை வணிகம், வரையறுக்கப்படாத பங்குடமை வணிகம் ஆகிய இரண்டுக்குமிடையிலான இரண்டு வேறுபாடுகளைத் தருக.

(4x5 = 20 புள்ளிகள்)

**(04)** சஞ்சீவ ரத்நாயக்கவும் அவருடைய நண்பரான ருவன் பெரேராவும் இணைந்து வணிகம் ஒன்றை ஆரம்பிக்க எண்ணியுள்ளனர்.

1) அ) இருவரும் இணைந்து பங்குடைமை வணிகம் அல்லது வரையறுக்கப்பட்ட தனிக் கம்பனியொன்றை ஆரம்பிப்பதற்கு எண்ணுவார்களாயின், அவ்விரு வணிக அமைப்புகளிலும் காணப்படுகின்ற இரு ஒற்றுமைகளைத் தருக.

ஆ) பங்குடமை வணிகத்தின் இரு அனுகூலங்களையும், தனிக்கம்பனியின் இரு அனுகூலங்களையும் தருக.



iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers Model Answers - Study Resources

2) அ) வரையறுக்கப்பட்ட பொது கம்பனியொன்றை ஆரம்பிக்க இவர் முடிவு செய்வார்களாயின், பொதுக் கம்பனியின் இரண்டு பிரதிகூலங்களைத் தருக.

ஆ) வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனி, வரையறுக்கப்பட்ட தனிக்கம்பனி ஆகிய இரண்டுக்குமிடையிலான இரண்டு வேறுபாடுகளைத் தருக.

3) அ) வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றைப் பதிவு செய்வதற்கு தயார் செய்ய வேண்டிய ஆவணங்களைக் குறிப்பிடுக.

ஆ) முயற்சியாண்மையின் நிறுவனம் சார்ந்த நான்கு அனுகூலங்களைத் தருக.

4) அ) முயற்சியாண்மையினூடாக புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவாவதுடன், இதன் காரணமாக நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் வேகமும் அதிகரிக்கும். இதனுடன் தொடர்புடைய பின்வரும் வரைபடத்தின் வெற்றிடங்களைப் பொருத்தமான விடைகளை எழுதிப் பூரணப்படுத்துக.




ஆ) முயற்சியாளரொருவரிடம் இருக்க வேண்டிய நான்கு திறன்களைத் தருக.

5) முயற்சியாளருக்கும், வணிகருக்குமிடையில் காணப்படுகின்ற நான்கு வேறுபாடுகளைத் தருக.

(4x5 = 20 புள்ளிகள்)

## பகுதி - II

**(05)** 1) அ) இலங்கை போன்ற நாடொன்றிலுள்ள வணிகங்கள் சிறிய மற்றும் நடுத்தரளவு வணிகங்கள் என இனங்காணப்படுவதற்கான இரண்டு காரணங்களைக் குறிப்பிடுக.

ஆ) இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தரளவு வணிகங்களை இனங்காண்பதற்கு பயன்படுத்தப்படுகின்ற அளவு சார்ந்த நியதிகள் நாள்கு தருக.

2) அ) சிற்றளவு வணிகம் என்றால் என்ன விளக்குக.

ஆ) சிறிய மற்றும் நடுத்தரளவு வணிகங்களுக்கு ஊக்குவிப்புக்களை வழங்குகின்ற அரச நிறுவனங்கள் நான்கு தருக.

3) அ) இலத்திரனியல் பணத்தைப் பயன்படுத்தி கொடுக்கல் வாங்கல் செய்வதற்கு தேவையான நான்கு வசதிகளைக் குறிப்பிடுக.

ஆ) குத்தகைக் கம்பனிகளால் வணிகர்களுக்கு கிடைக்கும் நான்கு அனுகூலங்களைத் தருக.

4) முயற்சியாண்மை மூலதனக் கம்பனிகளின் தொழிற்பாடுகளை விளக்குக.

5) அ) பங்குத்தரகர் கம்பனிகளின் நான்கு கருமங்களைத் தருக.

ஆ) வணிக வங்கிகளினால் நடைமுறை வைப்பாளர்களுக்கு வழங்குகின்ற “மேலதிகப் பற்று வசதிகள்” என்பதனால் கருதப்படுவது யாது?

(4x5 = 20 புள்ளிகள்)



www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers · Model Answers · Study Resources

**(06)** 1) அ) வணிக வங்கிகளினால் வழங்கப்படுகின்ற சேவைகளில் ஒன்றாகிய இலத்திரனியல் வங்கிச் சேவை என்பதனால் கருதப்படுவது யாது என்பதை உதாரணங்களுடன் விளக்குக.
ஆ) தன்னியக்க வங்கிச் சேவையினூடாக வாடிக்கையாளர்களுக்கு கிடைக்கின்ற நான்கு அனுகூலங்களைத் தருக.

2) அ) காசோலையில் கோடிடல் என்றால் என்ன விளக்குக.
ஆ) இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையின் அங்கத்தவர்களைக் குறிப்பிடுக.

3) அ) காப்புறுதி ஒப்பந்தமொன்று செல்லுபடியாவதற்கு அதில் காணப்பட வேண்டிய நான்கு அடிப்படைகளைத் தருக.
ஆ) ஆதனக் காப்புறுதியின் போது பயன்படுத்தப்படுகின்ற மறுகாப்புறுதி என்றால் என்ன?

4) அ) கடலபாயக் காப்புறுதியின் கீழ் பல்வேறு காப்புறுதி ஒப்பந்த வகைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். அவ்வாறு பெற்றுக் கொள்ளக்கூடிய நான்கு காப்புறுதி ஒப்பந்தங்களைக் குறிப்பிடுக.
ஆ) பொதுமக்கள் பொறுப்புக் காப்புறுதி என்றால் என்ன? விளக்குக.

5) அ) “தொடர்பாடல்” என்பதற்கான வரைவிலக்கணத்தைத் தருக.
ஆ) வணிகமொன்றிற்கு துணைச் சேவைகள் எனும் வகையில் தொடர்பாடல் எவ்வாறு முக்கியத்துவம் பெறுகின்றது என்பதைக் காட்டுவதற்கு நான்கு விடயங்களைக் குறிப்பிட்டுக் காட்டுக.

(4x5 = 20 புள்ளிகள்)

**(07)** 1) நீங்கள் தகவல்களை இன்னொருவருக்கு வழங்கும் போது முதலில் அதற்குப் பொருத்தமான ஊடகமொன்றைத் தெரிவு செய்யுங்கள். எப்போதும் பிழையான தகவல்களை வழங்கக்கூடாது. அவ்வாறு வழங்கினால் உங்களைப் பற்றிய நம்பிக்கையானது தகவல் பெறுபவரிடம் அற்றுப் போய்விடும். அத்துடன் சகலரும் கூடிய வேலைப்பளுவுடன் காணப்படுவதனால் விடயங்களைச் சுருக்கமாகவும் எளிதாகவும் சகல விடயங்களையும் உள்ளடக்கியதாகவும் தகவல்கள் வழங்கப்படல் வேண்டும்.
மேலே தரப்பட்ட கூற்றானது தொடர்பாடல் சம்பந்தமான விரிவுரையொன்றில் கூறப்பட்டதன் பொழிப்பாகும்.
அ) பயனுறுதியான தொடர்பாடல் என்றால் என்ன?

ஆ) மேலே தரப்பட்ட நிகழ்வில் பயனுறுதியான தொடர்பாடலொன்றில் இருக்க வேண்டிய சில பண்புகள் கூறப்படுகின்றன. அவற்றை நிகழ்வில் குறிப்பிடப்படுகின்றவற்றை உதாரணமாகக் காட்டி விளக்குக.

2) அ) தொடர்பாடலின் போது அதனை வெற்றிகரமாக மேற்கொள்வதில் பல்வேறு தடைகள் ஏற்படலாம். அவ்வாறான தடைகள் யாவை?
ஆ) எழுத்து மூலமான தொடர்பாடலின் இரண்டு நன்மைகளைத் தருக.

3) கொழும்பு மெனின் மார்க்கெட்டில் வியாபாரம் செய்யும் சுரங்க வெளிமடையில் உருளைக்கிழங்கு விவசாயம் செய்யும் பண்டார என்பவருக்கு 500 kg உருளைக்கிழங்குகளை அனுப்புமாறு குறுஞ்செய்தியொன்றை அனுப்பினார். இச்செய்தியினை வாசித்த பண்டார உடனடியாகத் தனது சக விவசாயி ஒருவருக்கு 500 kg உருளைக்கிழங்குகளை தயார்படுத்துமாறு அறிவித்தார். அதன் பின்னர் சுரங்கவிற்கு Whatsapp (புலனம்) செய்தியொன்றினூடாக உருளைக்கிழங்குகளை அனுப்ப முடியும் எனவும், லொறியொன்றை திங்கட்கிழமையளவில் அனுப்பி வைக்குமாறும் செய்தியொன்றை அனுப்பினார். செய்தியைப் பெற்றுக்கொண்ட சுரங்க லொறி உரிமையாளர் நுவனுக்கு திங்கட்கிழமை விடியற்காலையில் அவரின் லொறியினூடாக 500 kg உருளைக்கிழங்குகளைக் கொண்டு வந்து ஒப்படைக்குமாறு தொலைபேசி மூலம் அறிவித்தார்.
**தொடர்பாடலின் அடிப்படைகளைக் குறிப்பிட்டு மேலே தரப்பட்ட நிகழ்விலிருந்து அவற்றுக்கான உதாரணங்களை தருக.**



iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers Model Answers • Study Resources

4) அ) தரைப்போக்குவரத்தில் கூடுதலான அளவு பொருட்கள் மற்றும் பயணிகளைக் கொண்டு செல்லக்கூடிய போக்குவரத்து ஊடகத்தைக் குறிப்பிட்டு, அதன் அனுகூலங்களைத் தருக.

ஆ) போக்குவரத்தானது நாட்டிலுள்ள மக்களுக்கும், வணிகர்களுக்கும் ஏன் முக்கியத்துவம் பெறுகின்றது என்பதை தலா இரு விடயங்களை முன்வைத்து விளக்குக.

5) அ) களஞ்சியப்படுத்தல் என்றால் என்ன?

ஆ) களஞ்சியசாலையினுள் பொருட்களை அங்குமிங்கும் கொண்டு செல்வதற்குப் பயன்படுத்துகின்ற நான்கு உபகரணங்களைத் தருக.

(4x5 = 20 புள்ளிகள்)

**(08)** 1) மொத்த வியாபாரியினூடாக உற்பத்தியாளருக்கும், சில்லறை வியாபாரிகளுக்கும் பல்வேறு நன்மைகள் கிடைக்கப் பெற்றாலும், மொத்த வியாபாரிகளுக்கு எதிராக பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுள்ளன.

அ) மொத்த வியாபாரிக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்கள் யாவை?

ஆ) இலங்கையிலுள்ள வணிக நிறுவனங்கள் பின்பற்றுகின்ற பல்வேறு விற்பனை முறைகள் நான்கு தருக.

2) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளுக்கிடையில் குறித்ததொரு காலப்பகுதியில் வியாபாரப் பொருட்களைப் பரிமாறிக் கொள்வதற்காக ஏற்படுத்திக் கொள்ளப்படுகின்ற புரிந்துணர்வு வியாபார ஒப்பந்தம் எனப்படும்.

அ) வியாபார ஒப்பந்தங்கள் இரு முறைகளில் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்விரண்டு முறைகளையும் தருக.

ஆ) 2024 ஆம் ஆண்டு வரை செயற்பாட்டு மட்டத்தில் காணப்படுகின்றதும், இலங்கையுடன் தொடர்புடையதுமான வியாபார ஒப்பந்தங்கள் மூன்று தருக.

3) பின்வரும் எண்ணக்கருக்கள் தொடர்பில் சுருக்கமாக விளக்குக.

அ) ஏற்றுமதிக் குறிப்பு　　　　ஆ) ஏற்றுமதி விசா அனுமதிப்பத்திரம்

4) எந்தவிதத் தடைகளுமின்றி பல்வேறு பிரிவினர்களுக்கு சுதந்திரமாகப் பொருட்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்வதற்கான சந்தர்ப்பம் காணப்படல் சுதந்திர வியாபாரம் எனப்படும். எனினும் சில நாடுகள் சுதந்திர வியாபாரத்திற்கெதிராக பல்வேறு பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றுகின்றன.

அ) சுதந்திர வியாபாரத்திற்கெதிராக விதிக்கப்படுகின்ற தீர்வை வரியல்லாத தடைகள் யாவை?

ஆ) பிரதான நாடுகள் சில ஏனைய நாடுகளுக்கெதிராக வியாபாரத் தடைகளை விதிக்கின்றன. வியாபாரத் தடைகளை விதித்தல் என்பதன் கருத்து யாது? என்பதைச் சுருக்கமாக விளக்குக.

5) பின்வருவனவற்றைச் சுருக்கமாக விளக்குக.

அ) **G-7** நாடுகள்　　　　ஆ) ஆசியான் அமைப்பு

(4x5 = 20 புள்ளிகள்)



iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers · Model Answers · Study Resources